[23rd February 1961

SRI M. KALYANASUNDARAM : இப்பொழுது சிறை இலாகா சூப்பிரண்டெண்ட் பதவிகளுக்கு நேரடியாக படித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படியிருக்கும்பொழுது அதிலேயிருந்து பிரமோட் பண்ணுவதற்கு அதிகாரிகள் இல்லையா ? யாராவது அதிகாரிகள் பரிசீலிக்கப்பட்டார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வேறு ஒன்றும் பரிசீலிக்கப்படவில்லை. நான் முன்பு கூறியதுபோல், பிரமோஷன் மூலம் செய்யலாம், டிரான்ஸ்பர் மூலம் செய்யலாமென்று விதி இருக்கிறது. டிரான்ஸ்பர் மூலம் செய்யலாமென்ற விதி கையாளப்பட்டது.

SRI A. A. RASHEED : Sir, is it not a fact that the Inspector-General of Prisons is appointed for a specific period and if so what is the specific period for which the present incumbent was appointed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such thing as specific period for which the Inspector-General of Prisons is appointed.

SRI M. KALYANASUNDARAM : இப்பொழுது ஜில்லாக்களில் பல தொழில்கள் நடைபெறுகின்றன. ஜில்லா அதிகாரிகளை கண்காணிப்பது மட்டுமல்லாமல், நிர்வாக அனுபவமும் இருக்க வேண்டும். போலீஸ் அதிகாரிக்கு அப்பேர்ப்பட்ட நிர்வாக அனுபவம் உண்டா ? அப்படியில்லை என்றால் ஏன் அவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சென்ற சில ஆண்டுகளிலே ஐ.சி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வந்தார்கள். அவர்களுக்கு என்ன தகுதியிருக்கிறதோ, அந்தத் தகுதி இந்தப் போலீஸ் அதிகாரிக்கும் இருக்குமென்று கருதி நியமித்திருக்கிறது.

Family income

*** 384 *Q*.—SRI S. M. ANNAMALAI** : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் குடும்பங்களின் வருவாயை கணக்கெடுக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால், எந்தெந்த இடங்களில் முதலில் ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

23rd February 1961]

SRI S. M. ANNAMALAI : இப்பொழுது நம் மாகாணத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியக்கூடிய நிலையில் இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னால் ஒரு குடும்பத்தின் வருவாய் எவ்வளவு இருந்தது? இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் வருவாய் அதிகரித்திருக்கிறதா என்று கணக்குப் பார்க்க சர்க்கார் ஏன் முன் வரவில்லை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது அவ்வாறு செய்வதற்கு அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

Bulls

* 388 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of breeding bulls purchased through the Hindustan Livestock Agency, Kilpauk, in 1960;

(*b*) the number purchased at the open market;

(*c*) the procedure adopted in fixing the prices for the open market purchase; and

(*d*) the average cost per animal for the purchases made through the Agency and open market respectively?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Two hundred and fifty-nine (Murrah buffalœ bulls).

(*b*) Five hundred and sixteen bulls (all white cattle).

(*c*) Bulls purchased from private breeders are collected in a place, inspected by the officers of the department and prices fixed on the spot taking into consideration the age, quality, conditions of the bulls and market rates, etc. Murrah buffalœ bulls are purchased from the breeding tracts in the Punjab after calling for competitive quotations and subject to certain conditions stipulatel by the Department about quality, age, etc.

(*d*) Rs. 785 and Rs. 714 respectively.

முரு பொலிகாளைகளை இந்துஸ்தான் லைவ்ஸ்டாக் அல்லது பின்னர் பாரத் லைவ்ஸ்டாக் எஜென்சி என்று வழங்கப்பட்ட ஸ்தாபனத்திடமிருந்து ரூ. 785 விதம் வாங்கப்பட்டது. மார்க்கெட்டில் வாங்கின விலை ரூ. 714. அதற்குமேல் ஒன்றோடொன்று ஒப்பிட முடியாது. எனென்றால் ரூ. 785 விதம் வாங்கினது முரு பொலி காளைகள். மார்க்கெட்டில் வாங்கினது "ஒயிட் கேட்டில்" (white cattle). இதுதான் வித்தியாசம்.